



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் விருதுநகரில் நடைபெற உள்ள தென்மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பில் அதிகளவில் பங்கேற்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, தாட்கோ சேர்மன் இளையராஜா மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., அவைத்தலைவர் பாலசுப்பிரமணியன், தலைமை செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி மதுரை பாலா, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். இளங்கோ, தஞ்சை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா உள்ளிட்டோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் குமரேசன், வெற்றிச்செல்வன், அன்புச்செல்வம், மருதுராஜா, வன்னி முத்துப்பாண்டி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.





மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி வருகிற 7ஆம் தேதி விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறும் கழக இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் பங்கேற்பது, வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரையை சிறப்பாக மேற்கொள்வது மற்றும் பிப்ரவரி 21 மதுரையில் நடைபெறும் பாக முகவர்கள் மாநாட்டில் பங்கேற்பது உள்ளிட்டவை தொடர்பான கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம் எல் ஏ., மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் கழக மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மாநில தீர்மானக் குழுச் செயலாளர் அக்ரி கணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன், மாவட்ட நிர்வாகிகள் ராகவன், முருகவேல் உள்ளிட்டோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், மணிமாறன், வைகை பரமன், அறிவுநிதி, முகேஷ் சர்மா, சரவணன் அம்பலம், ரமேஷ்குமார் என்ற ஜீவன், பி.கே.செந்தில், குரும்பன், போஸ் முத்தையா, நீலமேகம், சித்திக், அன்பு என்கிற துரை கோபால்சாமி, காவேரி சொக்கலிங்கம், சுப்பிரமணி, சரவண புவனேஸ்வரி, அண்ணாத்துரை, உஸ்மான் அலி, கௌதம் காவேரிமணியம், செல்வராஜ், மேலமடை பிரேம், தமிழ் சந்திரன், துபாய் நாகராஜ், சத்யராஜ், திராவிடமாரி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்

## திருவொற்றியூரில் அறிஞர் அண்ணா நினைவுநாள்!

*சென்னை, பிப்.5-*

பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் வள்ளலார் நெடுஞ்சாலையில் மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் கழகத்தினர் புகழஞ்சலி செலுத்தினர்.

இயக்கத்தின் தந்தை, தாய்நாட்டிற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் வள்ளலார் நெடுஞ்சாலை அஜாக்ஸ் என்ஃபீல்ட் தொழிற்சாலை அருகில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர், ★திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர்★ அவர்கள் கழக தோழர்களுடன் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் 5வது வட்டக் கழக செயலாளர் கே.பி. சொக்கலிங்கம், கழக பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன் கழக செயற்குழு உறுப்பினர் இரா.முருகேசன் மத்திய பகுதி பொருளாளர் எம். எஸ்.நாகலிங்கம், பகுதி முன்னாள் துணைச் செயலாளர் இ.ரமேஷ், வட்டக் கழக செயலாளர் ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி கே. கார்த்திகேயன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங், துணை அமைப்பாளர்கள் எஸ். செல்வம் டி..மகேந்திரன் ஆர்.குமரன், எம்.ரமேஷ், வே.கோபால் கே.ரமேஷ் வி.வேலாயுதம், டி.எஸ். பாபு, ராமையா, கே.செந்தில், துரைராஜ், எச். அலெக்ஸ், ஆர்.எம்.செல்வம், எஸ்.ஈசாக், ஆர்.சேகர், எஸ்.கிருஷ்ணன் டி.ராஜவேல், மதுரை முத்து, ஜோதி, அன்பு செல்வம், அஸ்வின், சத்யா, தன்ராஜ், பீட்டர், கோபி கிருஷ்ணா, பி.ரவி எஸ்.எல்லப்பன், வின்சென்ட், டைலர் மணி, வி.வசந்த், வை.ஃபாருக் ஜி.சுப்பிரமணியன், பிரவீன் ராஜ், அந்தோணி, கஜேந்திரன் டி.ரமேஷ் கோவிந்தசாமி, ராதாதங்கவேல், தங்கவேல், இ.பி.இளங்கோ, மூர்த்தி, அ.பாண்டியன் கே.எஸ்.ஆனந்தன் கருணாநிதி ராமராஜ், தேவராஜ், எம்.எஸ்.ரவி, தயாளன், இரா.கணேசன், வசந்த், ஆர்.சிவா, சுகந்தா, மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா மடப்புரம்கோவிலில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 57 வந்து ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சமபந்தி விருந்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகினார். உடன் ஒன்றிய செயலாளர் எம்.ஏ.கடம்பசாமி அச்சன்குளம் முருகன் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



நெல்லை மாநகராட்சி நெல்லை மண்டலம் வார்டு 25 ல் மேயர் ராமகிருஷ்ணன் கோரிக்கையை ஏற்று நெல்லை டவுன் காவல் நிலையம் எதிரில் அமைந்துள்ள மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையம் வளாகத்தில் நெல்லை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள நியாயவிலைக் கடை கட்டிட பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் செ.ராபர்ட் புரூஸ் எம்.பி., மேயர்.கோ.ராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தனர்.உடன் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சந்தன செல்வி, மாநகராட்சி சுகாதார மேற்பார்வை யாளர் சிவக்குமார்,வட்ட கழக செயலாளர் அருள் சுந்தரராஜன்,வட்ட பிரதிநிதிகள் லட்சுமணன்,சத்யா ஆறுமுகம்,பக்கீர் மைதீன்,ஜாபர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசி மணி, தலைமைக் கழக பேச்சாளர்கள் நெல்லை முத்தையா,ராவணன்,மில் ஜெ.குமார் உள்பட பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் 7ம்தேதி விருதுநகரில் நடைபெற உள்ள இளைஞரணி மண்டல மாநாடு குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் புதுச்சேரி மாநில இளைஞரணி அமைப்பாளர் செ.சம்பத் சிறப்புரை ஆற்றினார். உடன் நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கை.எம்.பொற்கோ, நகர் இளைஞர் அணி அமைப்பாளர் மாரி கண்ணன் ஆகியோர் உள்ளனர்.




சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா 57வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பேரும் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் எஸ். சண்முகவடிவேல் முன்னிலையில் நடைபெற்.றது. இதில் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் , மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் என்.எம்.சாக்ளா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய ம் இளையான்குடி பேரும் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 57வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு முன்னாள் எம்எல்.ஏ சுப.மதியரசன், பேரூர் கழக செயலாளர் பி.ஏ.நஜ்மூதீன் உட்பட நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்
### பிப்ரவரி 5 (2021)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் அணுக்கமாக இருந்து அரிய முறையில் தமிழ் எழுத்துப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளில், அதன் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற 150 பேரில் ஒருவரும் – தன் இறுதி மூச்சு வரை கழகத்தின் உறுதியான உடன்பிறப்புகளில் ஒருவராக விளங்கியவர்.

71 ஆண்டுகளுக்கும் மேலாக முழுநேரமும் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு, நல்ல தமிழ்ச் சொற்களை நடைமுறைக்கு கொண்டு வந்த தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளராக விளங்கியதுடன், கழக ஏடுகளான ‘மாலைமணி’, ‘நம்நாடு’, ‘கழகக்குரல்’ உள்ளிட்ட பல்வேறு ஏடுகளில் பணியாற்றியதுடன், முதலில் ‘கவிக்கொண்டல்’ என்றும் பின்னர், ‘மீண்டும் கவிக்கொண்டல்’ என்றும் தொடர்ந்து 32 ஆண்டுகள் அவ்விதழை நடத்தியவர். 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

மவுண்ட்ரோடு போஸ்ட் ஆபீஸ் என்ற பெயரை ‘அண்ணாசாலை அஞ்சல் அலுவலகம்’ என்று பெயர் மாற்றிட காரணமாக இருந்தவர்.

2018ஆம் ஆண்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தலைமைக் கழகத்தின் சார்பில் “பேராசிரியர் விருது” வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

## குத்தாலம் பி.கல்யாணம் சகோதரர் பி.சந்திரசேகரன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

*மயிலாடுதுறை பிப். 5-*

மயிலாடுதுறை மாவட்டம் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் சகோதரரும் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் க.அன்பழகன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.அறிவுச் செல்வன் ஆகியோரின் சிறிய தந்தையுமான சின்னபிள்ளை [எ] பி.சந்திரசேகரன் நேற்று முன்தினம் (03.02.2026) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருத்துகிறோம்.

மறைந்த பி.சந்திர சேகரனுக்கு மனைவி சி.உமா மகன்கள் சி.வினோத், சி அஸ்வின் ஆகியோர் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (04.02.2026) மாலை 03.00 மணிக்கு நடைபெற்றது.

குத்தாலம் திருவேள்விக்குடியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்ட பி.சந்திர சேகரன் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

### தி.மு.க. இலக்கிய அணி

## இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்களாக **மு.பா. இளஞ்செழியன்** (71/2, திருவள்ளுவர் தெரு, கேணிக்கரை, இராமநாதபுரம்.), **ம. சரவணன்** (1/27, எம்.எஸ்.கே. நகர், இராமநாதபுரம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-02-2026.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

**13–ம் ஆண்டு**

## நினைவு அஞ்சலி

**“ கலைஞர் விருது பெற்ற ”**

மத்திய, மாநில அரசு நல்ஆசிரியர் விருது பெற்ற



தோற்றம் : 08.04.1920 மறைவு : 05.02.2013

திருமதி

## பொற்செல்விஇளமுருகு

...என்றும் நினைவில் வாழும்...

**பெ.ஆனந்த்குமார்** B.Com., Ex.M.C.,

கரூர் மாவட்ட துணை அமைப்பாளர், தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி